**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண்.142/2015**

**வா.சா.1**

| | | |
|---|---|---|
| சாட்சியின் பெயர் | : | சேகர் |
| தகப்பனார் பெயர் | : | சின்னமுத்து |
| வயது | : | 57/2024 |
| தொழில் | : | |
| மதம் | : | |
| ஜாதி | : | |
| கிராமம் | : | சித்துவார்பட்டி |
| தாலுகா | : | வேடசந்தூர் |
| மாவட்டம் | : | திண்டுக்கல் |

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 06.08.2024ம் தேதி என்னால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை**

வா.சா.2 ஆவணமாக கிரைய ஆவணத்தில் உள்ள கிரைய சொத்தில் கிரைய சொத்தான தாவா சொத்து ஊர் நத்தம் என்று காண்பித்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வா.சா.3 ஆவணமாக கிரைய ஆவணத்தில் தாவா சொத்தை ஊர் நத்தம் என்று காண்பித்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்து அப்துல் சப்தார் மற்றும் அப்துல் கரீமுக்கு அரசால் ஒப்படைவு உத்தரவு நகல் எனது தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வில்லை என்றால் அந்த ஆவணம் தொலைந்து விட்டது.

இந்த வழக்கானது 2015ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு 9 ஆண்டு கால நிலுவையில் மேற்கண்ட ஒப்படைவு உத்தரவு நகலை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. சர்வே எண் 279/1 என்று என்னுடைய பிராதில் உள்ள சொத்து விபரத்தில் சொல்லியுள்ளேன். எதிர் உரையில் 1, 2 பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் சர்வே எண் தற்போது 832/5 என சொல்லப்பட்ட பின்பும், வழக்கு சொத்தில் உள்ள சர்வே எண்ணை மாற்றம் செய்வதற்கு எவ்வித திருத்தமும் பிராதில் மேற்கொள்ளவில்லை என்றால் எனக்கு தெரியாது.

பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரத்தில் சர்வே எண் 279/1க்கு எவ்வளவு

மொத்த விஸ்தீரணம் என்றால் 10 செண்ட் என்னுடைய பெயரிலும், 10 செண்ட் என்னுடைய மகன்களான 2, 3 வாதிகள் பெயரில் உள்ளது. சர்வே எண் 279/1ல் ஆழ்துளை கிணறு, வண்டிப்பாதை, விநாயகர் கோவில் மற்றும் சத்துணவு கூடம், பள்ளி கட்டிடம் 2, கலையரங்கம், தொலைக்காட்சி அறை உள்ளது என்றால் சரிதான்.

தொலைந்து போன ஒப்படைவு உத்தரவு என்னிடம் தான் உள்ளது என்றாலும் அதை தற்போது தாக்கல் செய்தால் வழக்கின் உண்மை விபரங்கள் தெரியவரும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்து ஊர் நத்தம் என்பதால் எனக்கு கிரையம் கொடுத்த கிரையதாரருக்கு கிரையம் செய்து கொடுக்க சட்டப்படி எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல.

வா.சா.3 ஆவணமான கிரைய ஆவணத்தில் அப்துல் கரீம், பின்னியப்ப தேவருக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்பு வழக்கு சொத்து சம்மந்தமாக 1, 2 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபின்பு எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண் வித்தியாசம் சம்மந்தமாக வருவாய் துறை ஆவணங்களை சரிபார்த்தேனா என்றால் எனக்கு அரசாங்கம் தெரிவிக்கவில்லை.

வருவாய் துறை ஆவணங்களில் பழைய சர்வே எண் 279/1க்கு, புது சர்வே எண் 839/5 பாதை என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் 279/1ல் என் அக்காவிற்கு 3 செண்டை கிரையம் செய்து கொடுத்துள்ளேன். அந்த 3 செண்டில் என் அக்கா தகர கொட்டாய் போட்டு வசித்து வருகிறார். 2015ம் வருடம் கலைச்செல்வி என்பவர் 2வது வார்டு உறுப்பினராக இருந்தார். ஊர் மக்கள் மேற்கண்ட 3 செண்ட் இடத்தை சேகர் ஆகிய நான் ஆக்கிரமிப்பு செய்தேன் என்பதால், அந்த சொத்தை அளவீடு செய்து தகர கொட்டாய் மற்றும் ஆஸ்பெட்டாஸ் சீட்டை அகற்ற கோரி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

நான் 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்த சர்வே எண் 264/1 என்றால் சரிதான். மேற்கண்ட சர்வே எண்ணில் பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ளனர். மேற்கண்ட வீட்டிலிருந்து சர்வே எண் 279/1 தற்போது சர்வே எண் 839/5ல் அமைந்துள்ள கிழமேல் பாதை வழியாக தான் ஊருக்குள் வரமுடியும் என்றால் சரியல்ல. அதற்கு தனியாக வேறு பாதை உள்ளது. தகர கொட்டாய் பாதைக்கு வடபுறம் உள்ளதா என்றால் சரியல்ல.

சர்வே எண் 279/1 என்பது ஊர் நத்தத்தத்தை ஆக்கிரமிப்பு செய்து அதில் உரிமை கொண்டாடி வருகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி தாவா சொத்து ஊர் நத்தம் என்பதால் விளம்புகை பரிகாரம் கோராமல், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் தங்களுடைய வீட்டிலிருந்து வருவதற்கு கிழமேல் பாதையை தான் சுமார் 20 வருடங்களுக்கு மேல் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by
G ASHOK PRASATH

**Principal District Munsif**
**Vedasandur**